# கவிஞர் பா.விஜயின் திரையிசைப் பாடல்களில் காதலறம்

## முனைவர் ப.செந்தில்நாதன்

உதவிப் பேராசிரியர்-தமிழ்த்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி),பெரம்பலூர்-621 220.

**முன்னுரை**

மனிதனின் இயல்பூக்க உணர்வுகளில் ஒன்று காதல். காதல் உணர்விற்குச் சாதியோ,மதமோ,இனமோ,நிறமோ, மொழியோ தடைவிதிக்க முடியாது. கதல் என்பது, மனிதன் தோன்றிய காலம் முதல் உள்ளது. அக்காதலைக் கருப்பொருளாகக் கொண்டு, கவிபாடிய கவிஞர்கள் உலகமெங்கும் உள்ளனர். கதைகளில் உள்ளடக்கமாகக் கொண்டு படைப்பாளர்கள் எழுதிவரும் இலக்கியங்களில் காதல் ஒரு பாடுபொருளாக அமைந்துள்ளது. கவிஞர் பா.விஜய் தமது படைப்புகளில் அக்காதலைப் பலவகையாகப் பகுத்துக்கவிதைகளிலும், திரையிசைப் பாடல்களிலும் புனைந்து கூறியுள்ளார். ஆய்வுப்பரப்பில் கருத்துக்களை ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

**காதல் இலக்கணம் :**

எளிதில் எவரும் வரையறைச் செய்து விட இயலாத சொல் காதலாகும். காதலை உணர்வால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும். ஆண், பெண் இருபாலரும் ஒரேநேரத்தில் தம்முள் மனம் ஒத்துப் பழகும் தன்மை கொண்டது காதல். “காதல் என்பதன் சரியான பொருள் உடலுறவும், உள்ளமொன்றிய பண்பும் இணைந்த ஓர் உணர்வு வெளிப்பாடாகும்.”1 என்கிறார் வேலுப்பிள்ளை. “இரண்டு உள்ளங்களிலும் ஏககாலத்தில் வரும் அன்புணர்ச்சி அல்லது ஆன்ம நேயம் தான் உண்மையான காதல். ”[2] காதல் உணர்ச்சி நிலையில் தான் உருப்பெரும். என்பர்.

“உயிருக்குயிராகப் பழகி, அன்பு செலுத்தும் ஆணும், பெண்ணும் உடலுறவு கொள்ளாத நிலையில் பழகுவது உயிர்க் காதலாகும். ”[3] உள்ளப் புணர்ச்சியே காதல் ஆகும். “அவனுக்காக அவளும் அவளுக்காக அவனும் வாழ முற்படும் போது காதல் அரும்புகிறது. அதுவே உண்மைக் காதல் ஆகும்”[4]

காதலுக்குரிய இலக்கணம் மற்றும் சிறப்புகளை பல்வேறு பாடல்களின் வாயிலாக கவிஞர் பா.விஜய் பதிவு செய்துள்ளார்.

“காற்று என்பதா? காதல் என்பதா?
கவிதை என்பதா சொல்!
இது இம்சை என்பதா இனிமை என்பதா?
இருக்கம் என்பதா சொல்…?
இது கொல்லாமல் கொல்கின்ற விஷம் என்பதா?
இது அமிலத்தில் உருவான அலை என்பதா?
இது பூவல்ல புயல் என்பதா?”[5]

என ‘பேரழகன’ திரைப்படத்தின் வாயிலாக விளக்கியுள்ளார். “வெல்டன்” திரைப்படத்தில்,

“காத்தடிச்சா மழையடிச்சா
கலங்கடிச்சு புயலடிச்சா
பூ உதிரும் இலை உதிரும்
ஆகாயம் உதிர்ந்திடுமோ
காதல் ஒரு ஆகாயந்தான்
அழிப்பது யாரு

அடை மழைய கொசு வலைக்கட்டி
நிறுத்துவதாரு”[6]

என்று பாடல் அமைத்துக் காட்டுகிறார்.

**காலந்தோறும் காதல்** :

பழந்தமிழ் இலக்கியமான சங்க செய்யுட்களில் மனமொத்த காதல், கைக்கிளைக்காதல், பெருந்திணைக் காதல் என காதல் நிலைகளை பேசுகின்றது. ஒரு தலைக் காதலான கைக்கிளையில் ஒருவர் பங்கு மிகுதியாகும். மனம் ஒத்த காதலுக் குத்தடை ஏற்படும் போது உடன் போக்கு நிகழ்ந்துள்ளது. சமய நூல்களில் இறைவன் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தினமை குறிக்கப் பெறுகின்றது. புனைகதைகளும், புதுக் கவிதைகளும் காதலைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. காலந்தோறும் கைவிடப்படாத கருப்பொருள் காதல் என்பதாகும்.

“காதலின் புனிதத் தன்மையைக் கட்டிக்காக்க உருவாக்கப்பட்ட காதல் கோட்பாடு காலந்தோறும் இலக்கிய வாதிகளாலும். மக்களாலும் மிக உயர்ந்ததாகக் கருதப்பட்டும், கற்பிக்கப்பட்டும் வருகிறது.”[7] காதல் என்பது ஆண், பெண் இரு பாலருக்கும் சம உரிமை உடையதாகும். உடலும், உயிரும் இருக்கும் போது காதல் தோன்றும் சங்க அகப் பாடல்களில் “காதல்” கருத்தியல் மிகுதி. இலக்கியம் காதலை உயரியதாக வேகருதியது. நடைமுறையில் மக்கள் அதற்குச் சரியான அங்கீகாரம் தருவதில்லை.

“நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தம் வியிப்பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினிலே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றனர்”[8]

எனத் தற்காலக் காதல் நிலையினைப் பாரதியார் கூறுகின்றார். உயிரினங்கள் அனைத்திற்கும் காதல் உணர்வு உண்டு. “காதல் அடைதல் உயிரியற்கை”[11] என்பார் பாரதிதாசன். காதலும் பாலுணர்வும் ஒருநாணயத்தின் இரு பக்கங்களாகும். காதல் உணர்வை வெளிப்படுத்த பாலுணர்ச்சி உதவுகிறது.

**உண்மைக்காதல் :**

உணர்ச்சிக்கு வடிகாலாக காமம் அமைகின்றது. பாலுணர்வு பூர்த்தியானதும் அக்காமம் ஒதுங்கி விடுவது உண்மையாகாது. மனதும் மனதும் ஒன்றுவது மட்டுமே உண்மைக் காதலாகும். இவ்வுண்மைக் காதலின் தன்மையை விளக்கும் வகையில் கவிஞர் பா.விஜய் ‘எனக்கு 20 உனக்கு 18’ என்றும் திரைப்படத்தில் உண்மைக் காதலை அழகாக படம் பிடித்துக் காட்டுகின்றார்.

“ஏதோ ஏதோ ஒன்று
எனக்குள்ளே நுழைந்து
ஆயுள் ரேகை நீளச்செய்கிறதே
காதல் ரேகை ஒன்று
இதயத்தைத் திறந்து
செல்லமாக மிரட்டிச் செல்கிறதே
… … … … …
சொற்கள் என்பதை மிஞ்சும் அர்த்தமும்
மௌனம் என்பதில் உள்ளது உள்ளது
மௌனம் மிஞ்சினால் பேசி விடுவது நல்லது”[9]

காதலில் மூழ்கிய தலைவனும் தலைவியும் ஒன்றெனக் கலந்து ஒழுகும் போது உள்ளக் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும் என்பதை மேற்கண்ட பாடலின் வாயிலாக கவிஞர்உணர்த்து கின்றார்.

தன்னிடம் ஆயுள் ரேகை கூடுவதாகவும், காதல் ரேகை தன்னுள் செல்வதாகவும், காதல் மௌனத்தை விட பேசுதல் சிறப்பானது என்றும் மேற்கண்ட பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது.

**உயிர்க்காதல் :**

இதயங்களில் மாறி மாறிப் புகுந்துள்ள அன்பு, ஆண், பெண் இணைப்பை ஏற்படுத்துகிறது. மெய்யுறு புணர்ச்சியின்றி வாழப் பிறந்த வாழ்வில் இருவர் உள்ளங்களிலும் உறைந்து கிடக்கும். கருத்தொருமித்த அன்பே உயிர்க் காதலாகும். இளம் வயதுக் காதலில் துடிப்பு இருக்கும். உள்ளத் தோய்வு மொட்டு விட்டிருக்கும் உயிர்க் காதல் சுகமானவலி எனவும், காதலுக்காக உயிரையும் தருவேன் எனவும் காதலன் உரைப்பதாக உயிர்க் காதலின் சிறப்பை

"முள்ளாய் நீ வந்தால்
கண்களை திறந்து காத்திருப்பேன்
தீயாய் நீ வந்தால்
என்னையும் திரியாய் நான் தருவேன்
… … … …
இதயம் ஒருநாள் இரண்டாக உடையும்
அன்று வந்து பார் உன் பிம்பம் தெரியும்
கண்ணீரிலே கடல் செய்து வைத்தேன்
நீ வந்து தான் நீராடி போ"[10]

என்கிறார் பா.விஜய் காதலியினால் வருகின்ற எத்தகைய துன்பமாயிருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதே உயிர்க் காதல் என தலைவன் வலியுறுத்துவதை மேற்கண்ட பாடலில் தெரிவிக்கிறது.

**காதலில்தேடல் :**

தன் மனதினை கொள்ளைக் கொள்ளும் தலைவனோஇ தலைவியோ யார் என இரு பாலரும் தேடலே காதலின் மிகச்சிறந்த தேடலாகும். அத்தகைய தேடலை பா.விஜய் கீழ்வரும் பாடலில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

"யாமினி யாமினி – என் காதலி யாரடி?
என்னிடம் என்னிடம் சொல்லடி
கிராமமா? நகரமா? இந்தியா தாண்டியா?
எங்கு தான் வாழ்கிறாள் சொல்லடி
… … … …
தேடினேன் தேடினேன்
பார்க்கும் இடம் எங்கும் தேடினேன்
என்னவள் என்பவள் யார்"[11]

பார்த்த பார்வையிலே தலைவியிடம் தன்னை இழந்த தலைவன் அவளை தேடுகின்றான். தன் மனதை கொள்ளை கொண்டு சென்ற தலைவியை எண்ணி மகிழ்கின்றான். புதிய உலகிற்கு தன்னை இட்டுச் சென்ற தலைவியை அவனது உள்ளம் தேடுகின்றது. அத்தகைய தேடலின் சிறப்பை 'உன்னைப் பார்த்த நாள் முதல்' என்னும் திரைப்படத்தில் கவிஞர்,

"எங்கே அவள் போனாள்
மனமே தேடிவா
என்னை என்ன அவள் செய்தாள்
எனக்குள் தேடவா
இது என்ன என்று புரியாமல்
இதயம் பாதி வேர்க்க

எனக்குள் என்ன இந்த மாற்றம்
யாரை நானும் கேட்க
எங்கே அவள் போனாள்
எங்கே அவள் போனாள்”[12]

என்றுரைக்கிறார் தன் காதலியிடம் காதலை கவிதையாகச் சொல்ல நினைக்கும் காதலன் உலக புகழ்ப் வாய்ந்த கவிஞர் களைத்தன் தேவைக்கு தேடுகின்றான். அத்தகைய புகழ்வாய்ந்த கவிஞர்களின் கவிதையை துணைக் கொண்டு காதலியிடம் காதலை சொல்ல நினைக்கும் காதலனின் உள்ளத்தை,

“கம்பன் எங்கே? எங்கே?
கீட்சும் எங்கே? எங்கே?
கவிதை வேண்டும் இங்கே
காதலியிடம் சொல்லத்தான்
காதலி எங்கே?
காதலி எங்கே?[13]

கவிஞர் பா.விஜய் திரைப்படங்களில் பதிவு செய்துள்ளார்.

**காதல் கருவி :**

இருவர் உள்ளம் ஒன்றிணையக் கருவியாகப் பயன் படுவன கண்கள் ஆகும். காதல் கருவியாகிய கண் குறித்து கவிஞர் பா.விஜய்,

“அட ஜன்னல் திறந்ததும் கண்கள் மலர்ந்ததும்
எண்ணில் நனைந்திடும் சாரலா?
கண்ணால் பேசிடும் பெண்கள் இல்லை யேல்
எங்கே தோன்றும் கவிதை
கையால் தீண்டிடும் ஆண்கள் இல்லையேல்
பாவம் பெண்கள் நிலைமை
… … … …
உன்னை பார்க்கும் வரை நூறு கோடி முறை
இருதயம் துடிப்பது கேட்கிறதா?”[14]

காதலின் சிறப்பில் கண்களின் பங்களிப்பை படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**காதல் ஏக்கம் :**

காதலனின் கூற்றில் அமைந்த தனது பாடலில் தன் விருப்ப வெளிப் பாட்டினைக் காதலிக்கு அறிவிக்கிறார். ஒருதலைக் காதலாக மலர்ந்ததைக் காதலியின் நிராகரிப்பு வழி விளக்குகின்றார் கவிஞர். அவள் வெறுப்பதால் இவனுக்கு ஆசை மிகுதியாகியது. தன்னைப் பார்த்து அவள் புன்னகையாவது செய்தியிருக்கலாமே என அவன் உள்ளம் ஏங்குகிறது. இதனை,

“உன் நீலக் கண்ணில் மூழ்கி
உன் காது பிரிவில் தங்கி
மூச்சிழந்தேன் அன்பே
உன் கூந்தல் அலை கொண்டு
உன் கொஞ்சும் மொழி கண்டு
நான் இங்கே வாழாமல் மண்ணில் சாய்ந்திடவோ?
உன் புன்னகையை உதிர்த்து விட்டுப்போ
நான் உயிரோடு வாழந்திடவே”[15]

என்று கவிஞர் எடுத்துரைக்கிறார்.

**காதலில் அழகு :**

காதலுக்கு உரியவாகும் பொழுது கண்ணில் தெரிவதெல்லாம் அழகின் வடிவங்கள் தாம். தன் காதலியை நினைக்கும் காதலனுக்கு உலகில் உள்ள பொருளின் திற மெல்லாம் ஒன்றாய் சேர்ந்த வடிவமாக தோன்றும். இதனை,

"இது காதலா? முதல் காதலா?
ஒரு பெண்ணிடம் உருவானதா
இது நிலைக்குமா? நீடிக்குமா? நெஞ்சே
… … … …
தூக்கம் போனதே
புதுவித ஏக்கம் வந்ததே
நீ தான் எந்தன் நெஞ்சத்தில் பாயும் இரத்தம்
உறங்கும் போது ஏதேதோ ஊறல் சத்தம்"[16]

என்று அழுகுற பதிவு செய்கிறார் பா.விஜய்.

**காதலில் தவிப்பு** :

பித்துப் பிடித்த மன நிலையில் காதலியின் உள்ள மதை உணரத் துடிக்கும் காதலன் தவிப்பை இளம் உள்ளங்களுக்கு எடுத்துக் காட்டுகிறார் கவிஞர். இதனை,

"நீ எங்கே உன் தேடல் எங்கே
உள்ளொன்று வைத்து போகாதே அங்கே
அங்கத்தில் வந்தாய் ஆள் மூச்சுத் தந்தாய்
நின்றேனே நானும் நின்றேனே நானும் சிங்காரமாய்
மாறுமோ? சேருமோ?
உன்னில் என்னைத் தந்திடுமோ?
ஏக்கமாய கேட்கிறேன் ஏந்தி விடு"[17]

நெருங்கி வந்து காதலைக் கூறும் படி தலைவன் கூற வெட்கத்தால் தலைவி தலைக் குனிவதாக மேற்கண்ட பாடலில் உணர்த்துகின்றார்.

"யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்."[18]

என்ற வள்ளுவரின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும். ஒரு முறை தான் வரும் இளமைக் காலம் அதில் உல்லாசப் புதுமைகள் புரிவது, ஒய்யார வண்ணங்கள் காட்டுவது என்பதை கவிஞர்பா.விஜயின் வழக்கமாகும்.

"மூச்சு விடும் ரோஜாப் பூ
பார்த்தில்லை யாரும் தான்
அவளை வந்து பார்த்தாலே
அந்த குறை தீரும் தான்
பதினேழு வயது முதல் வரும்
பதினெட்டு வயது வரை பெறும்
மாற்றங்கள் அத்தனையும் அவள்
அழகை கூட்டி விடுதே"[19]

என்று இளமைக் காலமே காதலுக் குரியகா மென்றும் அது சிலருக்கே வாய்க்கும் என்று கூறுகிறார்.

"மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படுவார்"[20]

என்பது அவர் தம் கருத்தாகும்;.

**காதலில் இன்பம்** :

தன்னை உயிரென நேசிக்கும் காதலனின் காதலை ஏற்கும் காதலியின் உள்ளம் மகிழ்ச்சியினால் திளைக்கும். அத்தகைய மகிழ்ச்சிக்கு இணையாக எந்தப் பொருளையும் உவமைப் படுத்த இயலாது. இவ்வாறான காதலியின் மகிழ்வினை கவிஞர் பா.விஜய் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"ஒரு அழகன் எனக்காக
எனக்கு முன்னே இருப்பானே
அவுக என்ன சொன்னாக
அத நான் சொல்ல மாட்டேங்க
அவுக என்ன தந்தாங்க
அத நான் பொத்திவச்சேங்க"[21]

என்று பட்டியலிடுகிறார். தான் நேசிக்கும் காதலன் தனக்காக மட்டுமே இவ்வுலகில் பிறப்பெடுத்தவனாகவும், தன் முன்னே வந்திருப்பவனாகவும், மனதில் இளையோடும் மகிழ்ச்சியினை தரவல்ல சில சொற்களை தலைவன் கூறியதாகவும் அதனை சொல்ல இயலாது என்றும், ஆசையாய் அவர் தந்த பொருளை பிறரிடம் தர இயலாது என்றும், தலைவி தன் உள்ள மகிழ்வினை வெளிப்படுத்துவதாக மேற்கண்ட பாடல் வழி கவிஞர் விளக்குகிறார்.

தான் நேசிக்கும் தலைவனை தன் உயிருக்கு மேலாகவும், இறைவனுக்கு ஒப்பாகவும் எந்நேரமும் தலைவனையே நினைத்திருக்கும் சிந்தனையை வேண்டுவதாகவும், காதலின் மகிழ்வின் உச்சத்தில் தலைவி பாடுவதாக 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' என்னும் திரைப்படத்தின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். கவிஞர். இதனை,

"திருவிழா போல காதல் தான்
அதில் நீயும் நானும் தொலைவோமா?
ஸ்ரீ ராமஜெயத்தைப் போல் உனது பெயரை
தினம் எழுதிப் பார்க்கிறேன்
கிளி ஒன்றை வாங்கி உன் பெயரைக் கூறி
தினம் சொல்ல கேட்கிறேன்
உனை சேரத்தானே யுகம் தோறும்
மண்ணில் அவதாரம் ஆகிறேன்"[22]

என்ற பாடலின் வழி கூறுகின்றார். காதலனின் பெயரை தன் மனதில் மட்டும் உச்சரிக்காமல் ஊரார் அறிந்துக் கொள்ளும் வண்ணம் கிளி ஒன்றை வாங்கி வளர்ப்பதாகவும், பலயுகங்கள் ஆனாலும் தான் பிறவி எடுப்பது உன்னை அடைவதற்காகத்தான் என தலைவி தலைவன் மீதுள்ள காதலின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாக தலைவியின் நிலையை மேற்கண்டப் பாடலில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**காதலில் பாராட்டுதல் :**

காதலால் கட்டுண்ட தலைவனும் தலைவியும் காதலின் சிறப்பை,

"காதலித்துப் பார்க்கையில்
இதயம் நின்று போகுமே
இதயம் நின்று போயினும்

இரத்த ஓட்டம் ஓடுமே
பிறப்பு போல இறப்பு போல
ஒரு முறை தான் காதல் தோன்றுமே”[23]

என்று தெளிவுறுத்துகின்றார் கவிஞர் பா.விஜய. காதலின் சிறப்பினைப் ‘பார்வை ஒன்றே போதுமே’ திரைப்படப் பாடல் வாயிலாக பா.விஜய் வெளிப்படுத்துகின்றார். இந்த உலகில் காதல் இல்லாமல் எந்த உயிரும் இல்லை. உயிர்களின் அச்சாணியாக காதல் திகழ்கிறது என கவிஞர் பா.விஜய் அவர்கள் கீழ் வரும் பாடலின் வழி உறுதிப் படுத்துகின்றார்.

“ஒரு பூவைக் கேட்டுப்பார்
அது காதல் விதைதானே
ஒரு புயலைக் கேட்டுப்பார்
அது காதல் கதைதானே
இந்த காதல் இல்லாமல்
இரு மூச்சில் உயிரில்லை
இந்த காதல் சொல்லாமல்
உயிர் யாரும் விடவில்லை
வாழ்க்கை என்னும் பாதையிலே
காதல் வாசம் தோன்றிடுமே
காற்றே கூட தடுத்தாலும்
காற்றைத் தாண்டி வீசிடுமே”[24]

காதலின் குறியீடாய் இருக்கும் பூக் கூட காதலின் விதையே ஆகும். அப் பூவை தொடும் புயலும் கூட காதலின் கதையே ஆகும். இந்த உலகின் உயிர் மூச்சாய் காதலே விளங்கு வதாகவும் காதல் இல்லை என்றால் இந்த பூமியே சுற்றாது. என்றும், வாழ்க்கை பாதையில் காதல் அச்சாணியாக அமைகிறது என்றும் காதலை வெகுவாக கவிஞர் உயர்வு படுத்துகிறார்.

**காதலில் முத்தம் :**

காதலர் இருவருக்கும் மெய் தொட்டுப் பயில்தல் இயல்பான ஒன்றாகும். தென்றல் தொட்டு விளையாடும். கன்னியின் இதழ்ச் சுவை அறிய விரும்பும் காதலனைக் குறித்து கவிஞர் பல பாடல்களில் குறிப்பிடுகிறார். “காதற் சிறப்பு உரைத்தல்” என்னும் அதிகாரத்தில் முதன் முதலில் வள்ளுவர் இதழ்ச் சுவையை,

“பாலோடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாயெயி லூறிய நீர்”[25]

என்கிறார். பாலும் தேனும் கலந்தாற் போன்ற சுவை தரும் முத்தம் குறித்து ஆண்டாளும் தன் பாடலில் வெண்சங்கிடம் கேட்கிறார். “மருப்பொசித்த மாதவன் தான் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே”[26]

என்று காதலர்க்கு அந்தரங்கமான முத்தமிடல் அரங்கத்தில் வரும் போது இலை மறைக்காயாக இனிமை சுவை தருவதாக அமைகிறது.

“கொஞ்சம் இனிக்கும் கொஞ்சம் சிரிக்கும்
முத்தச் சுவைக்குள் மூழ்கவா
இச்சை இருந்தும் கச்சைஅணிந்தேன்
சர்ச்சைகள் செய்திடவா
உன் கண் கொண்டு என்னை கொய்யாதே
உன் தீ மூச்சால் என்னை கொல்லாதே
முத்தங்கள் போட்டு சீசசம்சம் … சீசசம்சம்

வித்தைகள் காட்டு"[27]

என்றுரைக்கிறார் கவிஞர் பா.விஜய். திரை இசைப் பாடல்களில் காதல் கனிந்து விட்ட நிலையில் காதலர் இருவரும் விரும்பி ஏற்கின்ற முத்தம் குறித்து பாடல்கள் பல உலா வருகின்றன.

"ஏய் முத்தம் தருவாயோ முத்தம் தருவாயோ
ஒரு சத்தம் கித்தம் கேட்காமல்
நீ முத்தம் தருவாயோ
ஏய் பக்கம் வருவாயோ
பக்கம் வருவாயோ"[28]

என்ற வண்ணம் காதலர்களிடத்தில் இடம் பெறும் முத்த மோகத்தைத் தூண்டி முதலில் நிற்கிறது. பிரிந்திருக்கும் காதலர்க்கு மாலைப் பொழுது மிகவும் துன்பம் தரும். அகப் பொருள் மரபில் 'பொழுதுண்டு இரங்குதல்' என்னும் ஒரு முறை உண்டு. சேர்ந்திருந்த போது இன்பம் செய்த மாலைப் பொழுது துன்பம் தரும். குறுந்தொகை தலைவி ஒருத்தி,

"மாலை நோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன்"

என்றுகுறிப்பிடுகிறாள். இதைப் போன்றே குறுந்தொகைத் தலைவி ஒருத்தியும்,

"மாலையோ அறியேன் மன்னே மாலை
நிலம் பரந் தன்ன புண்கணோடு
புலம் புடைத் தாகுதல் அறியேன் யானே"[29]

என்றுரைக்கின்றர். தலைவி மாலை தரும் தனிமைத் துன்பதை உணர்கிறாள். 'திவான்' என்னும் திரைப்படத்தில் இன்பமான காதலின் மாலை பொழுதின் பங்களிப்பை,

"சந்தனைக் கட்டையாக நீயும் நிக்குற
ஒன்ன ஒரசத்தானே மாலை வெயில் துள்ளுது
தேக்கு கட்டையா நீயும் நிக்குற
உன்னை செதுக்கத்தானே மாலை வருகுது"[30]

என்று வருணிக்கிறார் கவிஞர்.

**தூக்கமின்மை :**

காதல் நினைவால் தூக்கம் வராது தவிக்கும் காதலர்கள் அதனை சுகமெனவே கருதுவர். அத்தகைய சுகத்தையே காதலர்கள் விரும்புவர். தூக்கமின்மையும் காதலின் பரிசாகவே காதலர் எண்ணுவது உலக வழக்கமாகும்.

"மனம் எனும் மண்டபம்
மௌனமாய் உள்ளது
யாரது? யாரது?
மாய ஜாலமாய் உள்ளது
என்னவள் என்னவள் யார்?
நெஞ்சில் எந்தன் நெஞ்சில்
போர்க் கப்பல் வேகமாக மோதுதே
கண்ணில் – இமை ரெண்டும் கலவரம்
கல் வீச்சில் இறங்குதே
தூக்கம் காணாமல் போனதே"[31]

என வெளிப்படுத்துகின்றார். தன்னுடைய மனதில் எந்தவொரு பெண்ணும் இதுவரை இடம் பிடிக்கவில்லை என வருந்தும் தலைவன் தனக்கான தலைவி இல்லாத காரணத்தால் தூக்கமின்றி தவிப்பதாக தலைவன் உரைக்கிறான்.

"பாரப்பா பாரப்பா
யாரப்பா யாரப்பா
பாரப்பா பாரப்பா பிகர் வருதப்பா
அது போத்திஸ் சில்க்ஸ் புடவையில் வலம் வருதப்பா
நடக்குற நடையில நான்
நாலு நாளா தூங்கல"[32]

ஒரு பெண்ணை பார்க்கும் தலைவனின் மனது மகிழ்வினை அடைகின்றது. அம் மகிழ்வின் காரணமாக அவளை வர்ணிக்கின்றான். அவள் நடக்கின்ற நடையைப் பார்த்ததில் நான்கு நாட்களாக தனக்கு தூக்கம் வரவில்லை என தலைவன் புலம்புவதாக, மேற்கண்ட பாடலின் வழியாக காதலில் தூக்கமின்மையை கவிஞர் சிறப்பித்துரைக்கின்றார்.

"முதல் முறை முதல் முறை
மென்மையைத் தொட்டுச் சொல்
மொத்தமாய் மொத்தமாய்
பெண்மையைக் கண்டுசொல்
இதயத்தில் இதயத்தில்பைய பைய
இருவிழி அவஸ்தைகள் செய்ய செய்ய
மனசுக்குள் உயிர் திரை நெய்ய நெய்ய
கனவுக்குள் அடை மழை பெய்ய பெய்ய"[33]

என பதிவிடுகின்றார் கவிஞர். முதல்முறையாக பெண்மையைத் தீண்டும் தலைவன் அதன் மென்மையை உணர்கின்றான். அவளது பார்வைகள் தலைவனுடைய மனதில் பலவிதமான சுகமாக நெருடல்களை உண்டாக்குகிறது. அது தலைவனின் உறக்கத்தை கெடுக்கின்றது அதன் காரணமாக தோன்றும் கனவுகளும் அவனுக்கு சுகமாய் இருப்பதாக மேற்கண்ட பாடலில் கவிஞர் புலப்படுத்துகின்றார்,

**காதலில் பிரிவு :**

பிரிந்த துயரால் வருந்தும் காதலர்க்கு நன்மையும் தீமைபோல் தோன்றும். தலைவன் பிரிவால் தலைவி படும் இன்னல்கள் கவிஞர்களைத் தவிர வேறு யாராலும் வர்ணிக்க இயலாது.

"நீ எங்கே எங்கே உன் தேடல் எங்கே
உள்ளொன்று வைத்து போகாதே அங்கே
அங்கத்தில் வந்தாய் ஆள் மூச்சுத் தந்தாய்
நின்றேனே நானும் நின்றேனே நானும் சிங்காரமாய்
மீறுமோ? சேருமோ?
உன்னில் என்னைச் சேர்த்திடுமோ?"[34]

என தலைவன் பிரிவை வெளிப்படுத்துகின்றார் கவிஞர். ஏதோ ஒரு காரணத்திற்காக தலைவன் தலைவியை பிரிந்து இருக்கின்றான். அதனை எண்ணி உளமாற தலைவி வருந்துகின்றாள். தலைவனின் உருவத்தை அவள் கண்கள் தேடுகின்றது. அத்தகைய பிரிவின் ஏக்கத்தை நெகிழ்ச்சியோடு கவிஞர் பா.விஜய் உரைக்கின்றார்.

"சுயம் வரம் பூவை தொடுத்தவள் நீயே
கடைத் தெருவோரம் எரிந்த தென்ன?
சுடும் எனத் தெரிந்தும் சுகம் என நெருங்கி
சுட்டப் பின் என்னை சபித்த தென்ன?

பொன் வானம் நீங்கி மேகம் செல்லும்
ஊர் ஏதடி?
நல் வீணைக் கூட விரல் வெறுத்தால்
ஸ்வரம் ஏதடி?
மணிமாட குயிலே நீ கொஞ்சம் நில்லு
வனவாச குயிலுக்கு சந்தம் சொல்லு"[35]

தலைவியைப் பிரிந்த தலைவன் அவள் நினைவால் வாடுகின்றான். தன்னை நாடி வந்து திருமணம் செய்த பின் பிரிந்து சென்றது சரியல்ல் மேகம் இல்லா ஊரைப் போல, ஸ்வரம் இல்லா வீணைப் போல தான் இருப்பதாக தலைவன் காதலியின் பிரிவில் வாடுவதாக, 'ஞானப் பழம்'என்னும் திரைப்படப் பாடலில் கவிஞர் உரைக்கின்றார்.

காதலியின் பிரிவை தாங்கஇயலாத ஒருதலை வன்மனம் வருந்திபாடுவதாக கவிஞர் பா.விஜய் அவர்கள் முத்தாய்ப் பானபாடலொன்றை அமைத்துள்ளார். அப் பாடல் காதல் பிரிவின் இலக்கணம் போல் அமைந்துள்ளது.

"உன்னால் அடிஉன்னால்
என் ஆன்மா உருகும்
உன்னை தினம் தேடி
நுரையீரல் கருகும்
எத்தனை காதலின் தோல்விகள் உள்ளது
பூமியின் ஆழத்தில் புதைந்து
அத்தனை சோகமும் வெளியில் வந்தது
………………………………………….
அந்த இன்பம் துன்ப மடி
அந்த துன்பம் இன்பமடி
உயிர் தேடும் உந்தன்மடி"[36]

என பிரிவைப் பாடுகிறார்.

**காதலில் நம்பிக்கை** :

காதல் என்பது பிறவி தோறும் தொடர்வது என்ற நம்பிக்கை காதலர்க்கு உண்டு. பாரதியின் கண்ணன் பாட்டில்,

"சாத்திரக் காரரிடம் கேட்டு வந்துட்டேன் - அவர்
சாத்திரஞ் சொல்லியதை நினக் குரைப்பேன்
நேற்று முன்னாளில் வந்த உறவின்றி – மிக
நெடுமு பண்டைக் கால முதல் சேர்ந்துவந்ததாரு"

என்று கூறப்பட்டுள்ளது. காதலன் பேசுகிறான். இராமன் சீதையாகவும், கண்ணன் பார்த்தனாகவும், இரணியன்நரசிங்கமாகவும், புத்தன் யசோதரையாகவும் உறவு தொடர்ந்தே வந்ததாகவும், இனி வரும் பிறவியும் அதே போல் அமையும் என்றும் சாத்திரக் காரர் கூறியுள்ள கருத்தால் காதலிக்கு நம்பிக்கை ஊட்டுகிறான்.

"எந்த சாமி எனக்கு அந்த
வரங் கொடுக்கும் நல்லா
வரங் கொடுக்கும்
… … …
சாமி சிலைகள் நூறு ஆயிரம்

செஞ்சு செஞ்சு நானும் வைக்கிறேன்
சாமி ஒன்னு கண்ண முழிச்சு பாத்திடுமா
அவள காட்டிடுமா"[37]

இறைவனிடம் தன்னுடைய காதலியாரென அடையாளம் காட்ட வேண்டு மென்று தலைவன் வேண்டுகிறான். அவ்வாறு தன்னுடைய காதலியை காட்டினால் சாமிசிலைகள் செய்து கோவிலில் வைப்பதாகவும், இறைவனே தன் காதலியை அடையாளப் படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு தலைவன் பாடுவதாகவும் கவிஞர் பா.விஜய் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**பிரிவாற்றாமை :**

காதலர்க்கு புணர்வும் உண்டு. பிரிவும் உண்டு. காதலியை விட்டுப் பிரிவதற்கு தமிழ் அகப்பொருள் இலக்கணம் ஆறு வகையைக் கூறுகிறது. அவை; 1.ஓதற்பிரிவு 2.காவல்பிரிவு 3.தூதிற்பிரிவு 4.துணைவியிற்பிரிவு 5.பொருள்வயிற்பிரிவு 6.பரத்தையிற் பிரிவு என்பனவாகும்,

இல் வாழ்வில் இணைந்தோர், ஒருவர் மற்றவர் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையிலே தான் வாழ்க்கையின் நிறைவு அமைகிறது. இந் நம்பிக்கையில் தளர்வு ஏற்படுகின்ற போது, அதனால் பெரும் துன்பம் பெரிதாகிப் போகிறது. காதலன் ஒரு நம்பிக்கை தராமல் வராமல் இருந்து விடும் பொழுது காதலி உள்ளம் அனல் பட்டமெழுகு ஆகிறது. ஓய்தல் ஒழிதல் இன்றிக் காதலனை நினைக்கும் உள்ளம் 'என்னபிழை செய்தேன்' என்று தெரியாமல் தடுமாறுகிறது.

"தேனை மறந்திருக்கும் வண்டும் ஒளிச்
சிறப்பை மறந்து விடட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த
வைய முழுவதுமில்லை தோழி!"[38]

என்று பாரதியின் காதலி கண்ணனை நினைத்து கசிகிறாள். இதைப் போல வே கவிஞர் பா.விஜய் 'நீ வருவாய் என' என்னும் திரைப்படத்தில் பிரிவாற்றாமையை மையப்படுத்தி பாடலமைத்துக் காட்டுகின்றார்.

"பார்த்துவ்பார்த்து
கண்கள்வ்பூத்திருப்பேன்
நீ வருவாய் என
… … … …
எனக்குள்ள வேதனை
நிலவுக்குத் தெரிந்திடும்
கவிதைக்கும் கால்கள் இல்லை"[39]

என்பது அப்பாடலாகும்.

**கண்ணீரேபரிசு :**

உல்லாசவாழ்வு, எட்டடுக்குமாளிகை, உவகைத்தேர், ஆசை விளையாட்டு என்று கனவுகள் பல கொண்டு காதல் புரிய வந்த கண்ணிக்கு கண்ணீரே பரிசாகிறது.

"கண்ணாலே நீ என்னைத் தொட்டாய்
காயம் செய்துவிட்டாய்
தோட்டாவே இல்லாமல் சுட்டாய்
வெப்பத்தை கண்ணீரில் ஏற்றிவிட்டாய்"[40]

என்று பிரிவு எண்ணிக் கலங்கும் அவள் தன் நினைவை உலகிற்கு எடுத்துரைப்பதாகப் பாடல் அமைக்கிறார் கவிஞர் பா.விஜய்.

"உழந் துழந்து ஊர் நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டியவர் கண்டகண்"[41]

திருக்குறள் காதலி அமுது அழுதுதம் உயிரை இழக்கும் நிலையைத் தெரிவிக்கின்றது.தன்னை விரும்பிய பெண்பல் வேறு சூழ்நிலைகளில் தன்னோடு இருந்தவள் தற்போது பிரிந்து சென்றுவிட்டாளே என எண்ணி வருந்தும் தலைவனின் கண்ணீரை கவிஞர் பா.விஜய் அவர்கள் கீழ் வரும் பாடலின் வழிகாட்டுகிறார்.

"நீண்ட தூரம் போனாயே
யாரைக் கேட்டு போனாய்
மரணம் வேண்டும் என்றே தான்
யாரை நீயும் கேட்டாய்
.......................................
உயிர் இன்று இல்லை"[42]

என காதலில் கண்ணீரின் இடத்தை கவிஞர் உணர்த்துகிறார்.

**நிறைவுரை :**

பருவ மெய்திய பின் உள்ளமும், உடலும் இணைவதே காதல் எனப்படும். காதல் என்றாலே உண்மைதான். நாளடவில் உயிர் காதலாக மாறுகிறுது. காதலில் தேடல் என்ப தேபிரதானமானது ஒரே ஒரு பார்வைக்கு காத்திருந்தகாலம் போய்விட்டது. தற்காலத்தில் செல்பேசியின் கட்செவியில் காதலர்கள் தங்களின் புகைபடங்களை பரிமாறிக் கொள்கிறார்கள். ஆகையால் தேடல் என்பது புணர்ச்சிக்காக மட்டுமே இருக்கிறது. அதுவே வன்புணர்ச்சியாகவும் மாறிவிடுகிறது. காதலில் காதலில் தவிப்பு என்பது முதன்மையானது எல்லா நேரங்களிலும் காதலர்கள் தவிப்பதை பார்க்க முடிகிறது. அந்த தவிப்பே இன்பத்திற்கு வழிவகுக்கிறது. அதனால் பரிசு பொருட்கள், முத்தம் போன்றவை பரிமாறிக் கொள்கிறார்கள். இன்பக் காலத்தில் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசுவார்கள். களவு காலத்தின் இறுதி நிலையில் காதலர்கள் அதிகமாகவே துன்பப்படுவார்கள். வரைவு, உடன்போக்கு உள்ளிட்ட காரணங்களால் சிரமப்படுவார்கள். இறுதியில் "காதலர்களுக்கு கண்ணீரே" பரிசாககிடைக்கிறது.

காதல் என்பது இறைவன் கொடுத்தவரம். இறைவன் தந்தகலை, இளமையின் ரகசியம், இயற்கையின் அதிசயமாய், இதயங்களின் சிறை வாசமமாய் ஓர் வேதமாய், இளமையின் வரப் பிரசாதமாய் காலத்தால் அழிவில்லாதது காதல் ஆகும். உலகப் பொது மொழி, ஓசை இல்லாத மொழி, என காதல் உள்ளத்தால் பேசப்படுகிறது. எல்லைக் கடந்தது. நீயும் நானும் மறைந்து நம்மைப் பிறக்கச் செய்வது. என பரிமாணங்களை உலகுக்கு எடுத்துக்காட்டி அவ்வின்பத்தை வெளிச்சமிட்டுக் கவிஞர் பா.விஜய் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ள காதல் வித்தைகள் மிகுந்த பாராட்டுதற்குரியவையாகும்.

## சான்றெண் விளக்கம்

1. வேலுப்பிள்ளை, காலமும் கருத்தும், ப.78
2. மூ. வரதாசன், இலக்கியத்திறன், ப.107
3. பா�ஸ்ரீ, உதட்டோர மின்னல் ப.10
4. கா.சிவதம்பி, தமிழ் இலக்கியம், ப.188
5. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பகுதி 1, ப.212

6. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பகுதி 1 ப.16
7. கிருஷ்ணன், தமிழ் இனம், ப.16
8. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.278
9. எனக்கு 20 உக்கு 18 திரைப்பாட்டுப் புத்தகம்
10. பிரபுதேவா ஹிட் சர்வீஸ், ப.18
11. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 2, ப.189
12. அஜித் சூப்பர் ஹிட் பாடல்கள், ப.163
13. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1, ப.23
14. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1, ப.23
15. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1 ப.70
16. தனுஷ் ஹிட்ஸ் ப.18
17. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 2, ப.145
18. திருக்குறள், 1094
19. விஜய் சூப்பர் ஹிட் பாடல்கள், ப.18
20. திருக்குறள், 1289
21. பா.விஜய்; திரைப்படப் பாடல்கள், பாகம் 1, ப.176
22. பா.விஜய்; திரைப்படப் பாடல்கள், பாகம் 1 ப.க்.183,184
23. பார்வை ஒன்றே போதுமே திரைப்பாட்டுப் புத்தகம்
24. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1, ப.129
25. திருக்குறள், 1121
26. நாச்சியார் திருமொழி, ஏழாம் திருமொழி, பா.1
27. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1, பக்.52, 53
28. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1ப.71
29. குறுந்தொகை, 386
30. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1, ப.140
31. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1 ப.19
32. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 1 ப.27
33. பா.விஜய்; திரைப்படப் பாடல்கள், பாகம் 2, ப.07
34. பா.விஜய்; திரைப்படப் பாடல்கள், பாகம் 2ப.145
35. பா.விஜய்; திரைப்படப் பாடல்கள், பாகம் 2, ப.04
36. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 2, ப.84
37. கார்த்திக் சூப்பர் ஹிட் பாடல்கள், ப.107
38. பாரதியார் கவிதைகள், நான்காம் பாகம்,(14. என் பிரிவாற்;றாமை) பா.05
39. நீ வருவாய் என திரைப்பாட்டுப் புத்தகம்
40. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 2, ப.145
41. திருக்குறள் – 1177
42. பா.விஜய் திரைப்படப் பாடல்கள், பாகம் 2, ப.154